24.09.2025
Spl.S.C.No.13/2025

**அ.சா.1** திரு.தமிழ்செல்வன், த/பெ.திரு.ராஜகோபால்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

நான் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் என் புகார் மனுவிலும் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போதும் கூறினேன். எதிரி இந்து கவுண்டர் சாதியை சேர்ந்தவர் என்று நான் கொடுத்த புகார் மனுவில் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சொல்லி இருக்கிறேன். முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரி என்னை எப்படி எங்கு வைத்து தாக்கினார் என்று கூறிய விபரத்தை தான் நான் புகார் மனுவிலும் காவல் துறை கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போதும் கூறினேன். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் எனது பெரியப்பா மகன் முனி குமார் என்பவர் என்னை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றும் அதன் பிறகு சிந்துஜா தனியார் மருத்துவமனைக்கு என் தகப்பனார் என்னை அழைத்துச் சென்றார் என்றும் கூறியிருக்க கூடிய சங்கதி ஆனது புகார் மனுவிலும் காவல் துறை கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போதும் சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். எனது சொந்த ஊருக்கும் உசிலை ஊரணி என்ற ஊருக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் ஒரு கிலோ மீட்டர் இருக்கும். குமார் சலூன் கடைக்கும் மார்க்கண்டனின் சொந்த ஊரான எங்குமாப்பட்டி என்ற ஊருக்கும் 3 கி.மீ தூரம் இருக்கும். குமார் சலூன் கடைக்கும் எதிரியின் ஊரான வண்ணான் குளத்துப்பட்டிக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் ஒன்றரை கிலோ மீட்டர்

இருக்கும். மணப்பாறையில் இருந்து மார்க்கண்டனின் சொந்த ஊரான எங்குமா பட்டிக்கு இரவு 9 மணிக்கு மேல் பேருந்து கிடையாது என்றால் சரிதான். குமார் சலூன் கடையில் அந்த பகுதியில் உள்ள ஆட்கள் அனைவரும் அவரது பேசிக்கொண்டு இருப்பார்கள். அந்த சலூன் கடை உரிமையாளர் பெயர் ரூபேஷ் குமார் ஆகும். அன்றைய தினம் ஊர்காரர்கள் வேறு ஆட்கள் யாரும் இல்லை. அன்றைய தினம் குமார் சலூன் கடை உரிமையாளர் ரூபேஷ் குமார் அங்கு இல்லை. குமார் சலூன் கடை திறந்து இருந்தது. அன்றைய தினம் நான் மட்டும்தான் ஆப்பாடிப்பட்டி விநாயகர் கோவிலுக்கு சென்று வந்தேனா என்றால் இல்லை. என்னுடன் மார்க்கண்டனும் வந்தார். அன்றைய தினம் நானும் மார்க்கண்டனும் ஆப்பாடிப்பட்டி விநாயகர் கோவிலுக்கு சென்று வந்த விவரத்தை நீதிமன்றத்தில் கொடுக்க வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லி இருக்கிறேன். இந்த சம்பவத்திற்கு முன்பு எதிரிக்கும் மார்கண்டனுக்கும் இடையில் அறிமுகம் எதுவும் கிடையாது. எதிரி சென்னையில் வேலை பார்த்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் எதிரிக்கும் சம்பவத்திற்கும் வந்து பெரிய அளவில் அறிமுகம் கிடையாது என்றால் சரிதான். சம்பத்திற்கு பிறகு தான் எதிரியின் பெயர் அவரது அப்பா பெயர் போன்ற விபரங்கள் எல்லாம் எனக்கு தெரிய வந்தது. அன்றைய தினம் மார்க்கண்டனை நான் அவரது ஊரில் கொண்டு போய் விட்டு விட்டு வரவில்லை. சலூனில் தான் கொண்டு போய் விட்டு விட்டு வந்தேன். குமார் சலூன் கடை அருகில் டாஸ்மாக் கடை உள்ளது. அன்றைய தினம் மார்க்கண்டனை நான் இறக்கி விட்டபோது எதிரியை அந்த இடத்தில் பார்க்கவில்லை. நான் மார்க்கண்டனிடம் எவ்வாறு ஊருக்கு செல்கிறீர்கள் என்று கேட்டேனா

என்றால் அவர் அங்கேயே தங்கி விடுகிறேன் என்று சொன்னதால் நான் கேட்கவில்லை. நான் வீட்டிற்குச் சென்ற சுமார் அரை மணி நேரத்தில் மார்க்கண்டன் எனக்கு போன் செய்து விட்டார். இடைப்பட்ட நேரத்தில் நடந்த விபரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. நான் அங்கு வந்தவுடன் இரண்டு முதல் ஐந்து நிமிடத்திற்குள் எதிரி என்னை தாக்கி விட்டார் என்று சொன்னால் சரிதான். அன்றைய தினம் நான் வெள்ளை கலரில் சட்டையும், லோயரும் அணிந்திருந்தேன். எனக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக நான் அணிந்திருந்த வெள்ளை கலர் சட்டை மற்றும் லோயரில் ரத்தம் பட்டது. சம்பவம் நடந்த இடமான கோவில்பட்டியில் இருந்து மணப்பாறை செல்லக்கூடிய தார் சாலையிலும் இரத்தக்கறை படிந்தது. சம்பவம் நடந்தபோது மார்கண்டன் அருகில் தான் இருந்தார். அவர் தடுக்க முயற்சிக்கவில்லை. சம்பவம் நடந்த போது என்னையும் மார்கண்டனையும் எதிரியையும் தவிர வேறு யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். எனக்கு கத்தி குத்து சம்பவம் நடைபெற்ற பிறகு இரண்டு வண்டியில் ஐந்து நபர்கள் வந்தார்கள். அந்த ஐந்து நபர்களும் யார் என்ற விவரம் எனக்கு தற்போது வரை தெரியாது. நான் அங்கு இருக்கும் போது அந்த ஐந்து நபர்களும் இரண்டு வண்டிகளில் சென்று விட்டார்கள். எதிரியும் அவரது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். நான் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் இரண்டு வாகனங்களில் ஐந்து நபர்கள் வந்தார்கள் என்றும், அதற்கு பிறகு சம்பவம் நடைபெற்றது என்று சொல்லி இருந்தால் அது தவறானது ஆகும். சம்பவத்திற்கு பிறகு நான் அந்த இடத்தில் சுமார் பத்து நிமிடம் இருந்தேன். சம்பவத்திற்கு பிறகு நான் நன்கு பேசக்கூடிய சுயநினைவோடு இருந்தேன். எனது பெரியப்பா மகன் முனி குமார் என்பவர் இருசக்கர

வாகனத்தில் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். நானும் எனது பெரியப்பா மகன் முனி குமார் மட்டும் தான் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அந்த இருசக்கர வாகனம் என் பெரியப்பா மகன் முனி குமாருக்கு சொந்தமானதாகும். மார்க்கண்டன் அவரது வீட்டுக்கு சென்றாரா அல்லது அங்கே இருந்தாரா என்று எனக்கு தெரியாது. அந்த இடத்தில் இருந்து ஒரு போக்கு வண்டியில் என்னை அனுப்பி விட்டதாக நான் புகார் மற்றும் போலீஸ் விசாரணையின் போது சொல்லி இருந்தால் அது தவறானது ஆகும். மருத்துவமனையில் மருத்துவரிடம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போது சுய நினைவுடன் இருந்தேன். அப்போது மருத்துவர் எந்த வாகனத்தில் வந்தேன் என்னை யார் அழைத்து வந்தார்கள் என்ற விவரங்களை கேட்டு எழுதிக்கொண்டார். அப்போது மருத்துவரிடம் நான் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சதீஷ்குமார் என்ற நபரால் அழைத்து வரப்பட்டேன் என்று சொல்லவில்லை. அன்றைய தினம் என்னுடன் சதீஷ்குமார் என்ற ஒரு நபர் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு வரவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் என்னை எந்தெந்த பொருட்களால் எங்கு வைத்து தாக்கினார்கள் என்பதை சொன்னேன். என்னை சாவியால் குத்தியதாக மருத்துவரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை மருத்துவர் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொள்ள கூறினார். அந்த மருத்துவமனையில் சுமார் அரை மணி நேரம் இருந்தேன். நான் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது சம்பவம் பற்றி கேள்விப்பட்டு போலீசார் அங்கு வந்து விட்டார்கள் என்றால் சரிதான். அங்கு வைத்து என்னையும் காயம்பட்ட உடைகளையும் எனது காயத்தையும் போலீசார் பார்த்தார்கள் என்றால் சரிதான். அப்போது முனி

AAAAA

குமார் என் அருகில் தான் இருந்தார். அப்போதே போலீசார் என்னிடம் சம்பவம் எப்படி நடந்தது என்று கேட்டு எழுதி வாங்கி கையொப்பத்தை பெற்றுக் கொண்டார்கள். அடுத்த அரை மணி நேரத்தில் நான் சிந்துஜா மருத்துவமனைக்கு சென்று விட்டேன். அப்போது என் அப்பா தான் உடன் வந்தார். வேறு யாரும் வரவில்லை. சிந்துஜா மருத்துவமனையில் என்னை பரிசோதித்த மருத்துவரிடம் என்னை ஐந்து தெரியாத நபர்கள் தாக்கியதாக கூறினேன் என்றால் சரிதான். சம்பவம் எங்கு வைத்த நடைபெற்றது என்று சிந்துஜா மருத்துவமனையில் உள்ள மருத்துவரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது ரத்தக்கறை படிந்த உடைகளை போலீசார் என்னிடம் இருந்து வாங்கவில்லை. நான் 1ம் தேதி சிந்துஜா மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட பிறகு 09ம் தேதி வரை அங்கு சிகிச்சையில் இருந்தேன் என்றால் சரிதான். நான் அந்த காலகட்டத்தில் வெளியே எங்கும் செல்லவில்லை. உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நான் சிந்துஜா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மூன்று நான்கு நாட்கள் கழித்து போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போதும் என்னை விசாரித்து என்னிடம் எழுதி வாங்கி கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதன்பிறகு போலீசார் என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 7 சிவராஜ் என் அக்கா கணவர் ஆவார். சாட்சி ராஜேந்திரன் என் சிறிய தகப்பனார் ஆவார். அன்றைய தினம் நான் கூறுவது போல் எதிரி என்னை தாக்கவில்லை என்றும் எதிரியால் எனக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் நானும் மார்க்கண்டனும் ஆப்பாடிப்பட்டி விநாயகர் கோவிலுக்கு செல்லவில்லை என்றும் நாங்கள்

இருவரும் குடிபோதையில் குமார் சலூன் கடை அருகே நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது நாங்கள் தான் எதிரியிடம் பிரச்சனை செய்தோம் என்றும் எதிரி சத்தம் போடாமல் சென்று விட்டார் என்றால் தவறு ஆகும். அந்தப் பகுதியில் அதன் பிறகு நாங்கள் குடிபோதையில் பிரச்சனை செய்து கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத கும்பலால் தாக்கப்பட்டேன் என்றும், பின்னிட்டு பொய்யாக ஒரு புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).xxxxx,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Ape

24.09.2025
Spl.S.C.No.13/2025

**அ.சா.2** திரு.முத்துகுமார், த/பெ.சுப்பிரமணி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகள் அனைத்தையும் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போது சொன்னேன். நான் பேக்கரி கடையில் வேலை தான் பார்த்து வருகிறேன். அந்த பேக்கரியை வைத்து தொழில் செய்து வரவில்லை. போலீசார் என்னை விசாரித்த போது நான் அடையார் பேக்கரி வைத்து தொழில் செய்து வருவதாக கூறவில்லை. கனகராஜ் என்பவர்தான் அடையார் பேக்கரி கடையில் உரிமையாளர் ஆவார். அந்தக் கடையில் பகலில் நான்கு நபர்களும் இரவில் மூன்று நபர்களும் வேலை செய்வோம். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரி பழனிவேல் மார்க்கண்டனிடம் ஏன் இங்கு நின்று கொண்டிருக்கிறாய் என்று கேட்டதாகவும் அவ்வாறு கேட்டுக் கொண்டு இருக்கும்போது இருவரும் அடித்துக் கொண்டார்கள் என்று கூறிய சங்கதியை போலீசார் என்னை விசாரித்த போதும் சொன்னேனா என்றால் சொல்லி இருக்கிறேன். தமிழ்ச்செல்வன் மயக்கம் போட்டு கீழே விழுந்த பிறகு அந்த வழியாக வந்த ஒரு வாகனத்தில் ஏற்றி மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம் என்று தான் போலீசார் என்னை விசாரித்த போது கூறினேன். குமார் சலூன் கடையிலிருந்து சுமார் 100 முதல் 150 மீட்டர் தொலைவில் நான் வேலை பார்க்கக்கூடிய அடையார் பேக்கரி கடை அமைந்து இருக்கிறது. அன்றைய தினம் நானும் என்னுடன் கடையில் வேலை பார்த்த நபர்களும் இருந்தோம் என்றால் சரிதான். சத்தம் கேட்ட பிறகு சென்று போய் பார்த்தேன் என்றால் சரிதான். நான் போய் பார்த்தபோது சுமார் பத்து நபர்கள் அங்கு இருந்தார்கள். நான் அங்கு சென்று பார்த்தபோது தாக்கிய நபரையும் தாக்கப்பட்ட நபரையும் அதற்கு முன்பு எனக்கு தெரியாது. நான் அங்கு சென்று பார்த்த போது ஒரு நபர் காயத்துடன் இருந்தார். அந்த நபர் மயக்கம் போட்டு கிடந்த போது தண்ணீர் தெளித்தேன். சுமார் 20 நிமிடத்திற்கு பிறகு எழுந்து

விட்டார் சுயநினைவுக்கும் வந்து விட்டார். அந்த வழியாக வந்த ஒரு நபருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் காயம்பட்ட தமிழ்ச்செல்வனை ஏற்றி அனுப்பி வைத்தேன். அந்தத் தார் ரோட்டில் ரத்தக்கறை இருந்தது. அந்த இடத்திற்கும் மணப்பாறை காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் மூன்று கிலோ மீட்டர் இருக்கும். சுமார் அரை மணி நேரத்தில் போலீசார் அந்த இடத்திற்கு வந்து விட்டார்கள். எங்கள் கடைக்கு வந்து என்ன சம்பவம் நடந்தது என்று கேட்டு விசாரித்து எழுதிக் கொண்டார்கள். அதன் பிறகு இந்த வழக்கு தொடர்பாக போனில் விசாரித்தார்கள். அதன் பிறகு பத்து நாள் கழித்து அவ்வாறு போனில் விசாரித்தார்கள். சம்பவத்தன்று வந்த போலீசார் என்னிடம் எனது போன் நம்பர் வாங்கிக் கொண்டு சென்றார்கள். என்னை போலீசார் போன் மூலம் விசாரித்த போதும் அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கிக் கொண்டதாக தான் சொன்னேன். நான் அந்த பகுதியில் இருக்கக்கூடிய பேக்கரியில் வேலை பார்த்து வருவதால் போலீசார் சொல்லிக் கொடுத்தவாறு முதல் விசாரணை சாட்சியத்தில் கண்ட சங்கதிகளை கூறியிருக்கிறேன் என்றும், நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).xxxxx,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Copy